## ஆகஸ்ட் – 29

**"நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால், பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள்". - யாக் 4 : 3**

சரியாக விண்ணப்பம் பண்ணவும், சரியாக (உழைக்கவும்) பிரயாசப்படவும், நம்பவும் கூட கற்றுக் கொள்ளுவோமாக. இப்படிச் செய்வதற்காக, கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுவதற்குத் தாமதமாயும், கர்த்தருடைய வசனத்துக்கும், அவர் ஏற்கனவே நமக்குக் கொடுத்திருக்கிற படிப்பினைக்கும், எவ்வகையில் நமக்குப் போதிக்கிறார், நம்மை வழிநடத்துகிறார், ஆசீர்வதிக்கிறார் என்பதற்கும் செவிகொடுக்கத் தீவிரமாயிருப்போமாக. முதலில் கவனிக்கப்பட வேண்டிய நம்முடைய காரியங்கள் என்ன என்று அவரிடம் சொல்ல தாமதமாய் இருப்போமாக. எப்பொழுதும் நம்முடைய சொந்தச் சித்தத்தை நாடாமல், ஆனால் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் சித்தத்தையும் நாட நமக்கு இடங்கொடுக்கிற அந்த கிறிஸ்தவ குணத்தின் அபிவிருத்தியை அடைய உண்மையாகவே நாம் நாடுவோமாக. **- Z ’03, 204(R 3216)**

வேதாகமத்தின் நிபந்தனைகளுக்கு இணக்கமாகச் செய்யும் ஜெபத்துக்கு எப்பொழுதும் உத்தரவு கிடைக்கும். உத்தரவைப்பெற நீண்ட காலம் தாமதமாகலாம். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதும், அவருடைய வசனம் நம்மில் நிலைத்திருப்பதுமே அந்த நிபந்தனைகள். அந்த நிபந்தனைகள் அலட்சியம் செய்யப்பட்டு அநேக ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றன. இவ்விதமாக ஜெபிப்பது தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுவதாகும். ஆகையால், அதற்கு உத்தரவு கொடுப்பது தெய்வீகச் சித்தத்துக்கு இணக்கமாக இருக்கிறதில்லை. அவைகளுக்கு உத்தரவு பெறுவது விண்ணப்பம் செய்கிறவரின் உண்மையான நலனுக்காக இருக்கிறதுமில்லை. கர்த்தரிடத்தில் எதையாவது கேட்பதற்கு முன்னதாக, அந்த விண்ணப்பம் நம்முடைய பிரதிஷ்டைக்கும் நம்முடைய ஆசைகளின் மேலும் நடத்தையின் மேலுமுள்ள தேவனுடைய வசனத்தின் ஆளுகைக்கும் இசைவாக இருக்கிறதா என்று ஆழ்ந்து யோசனை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். **- P ’35, 117.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 27:8; 66:18; 84:11; நீதி 1:28-30; 8:17; ஏசா 59:2; எபி 4:16; 11:6; யோவா 14:13,14; 15:7; 16:23,24; யாக் 1:5,6; 5:16,18; ஆதி 32:26; 1யோவா 5:14,15; லூக் 18:1; எரே 11:11; 14:12; 15:1; 29:13; எசே 8:18; மீகா 3:4; ரோம 8:26,27; மத் 7:7-11.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 182 (R 5707)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சரியாக ஜெபித்தேனா? தவறாக ஜெபித்தேனா? பலன்கள் எவை?**